செ.வெ.எண்.335 நாள்.24.05.2018.

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி நகரில் 28.05.2018 அன்று குறுக்குத்துறை முருகன் கோவிலில் வைகாசி விசாகம் நடைபெற இருப்பதால், மேற்படி குறுக்குத்துறை முருகன் கோவில் அருகில் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடை எண்.10912 மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடத்திற்கு விடுமுறை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தினத்தில் மதுபான விற்பனை, மதுபானத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கடத்துதல், மதுபானத்தை பதுக்கி வைத்தல் போன்ற செயல்கள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்கச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் நிர்வாகம் நடத்தி வரும் மேற்கண்ட மதுபானக்கடை மற்றும் அதனுடன் இணைந்த மதுபானக்கூடம் ஆகியவை **28.05.2018** (திங்கள்கிழமை) அன்று மூடப்பட்டு இருக்கும். மேற்படி உரிம தலத்தில் மதுபானங்கள் விற்பனை கிடையாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், மேற்படி நாளில் திருக்கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் சட்ட விரோதமாக எவ்விடத்திலும் மதுபானங்கள் விற்பனை மற்றும் மதுபானங்கள் கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டால் காவல் துறை மூலம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.